**<u>HMOP .No. 85/2019</u>**

**<u>Date : 01.09.2022</u>**

***<u>ம.சா.1 ரமேஷ்</u>***

**<u>கு.வி தொடர்ச்சி</u>**

நான் மலேசியா செல்வதற்கு முன்னர் சேர்ந்தமரத்தில் குடியிருந்தேன் என்றால் சரிதான். நான் 2007ம் ஆண்டு மலேசியா சென்றேன் என்றால் சரிதான். உள்ளூரில் போதிய வருமானம் இல்லை என்பதால் சம்பாத்தியம் செய்ய வெளிநாடு சென்றேன் என்றால் சரிதான். நான் மலேசியா செல்ல கடன் எதுவும் வாங்கவில்லை. மலேசியா செல்ல எதிர்மனுதார் அவரது நகைகளை அடமானம் வைத்து எனக்கு பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாருக்கு திருமணத்தின்போது அவரது பெற்றோர் வீட்டில் இருந்து தங்க நகை போட்டார்கள் என்றால் சரிதான். நான் மலேசியாவில் 5 ஆண்டுகள் பணி செய்தேன். மலேசியாவில் வேலை கடினமானதால் சொந்த ஊர் திரும்பிவிட்டேன் என்றால் சரியல்ல. குடும்ப சூழ்நிலை சரியில்லாததால் வீடு திரும்பினேன். மலேசியா செல்வதற்கு முன்னர் நானும் எதிர்மனுதாரும் சேர்ந்து எதிர்மனுதார் பெற்றோர் வீடான சேர்ந்தமரத்தில் ஒன்றாக இருந்தோம். மலேசியாவில் இருநது 2011ம்ஆண்டு இந்தியா வந்தேன் என்றால் சரிதான். இந்தியா வந்தபின்னர் கேரளாவிற்கு வேலைக்கு சென்றேன் என்றால் சரிதான். 2011ம் ஆண்டு முதல் நான் தற்போது வரை கேரளாவில் தான் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். 2011ம் ஆண்டு முதல் நான் எதிர்மனுதாரை கேரளாவிற்கு அழைத்துசெல்லவில்லை என்றால் சரிதான். நான் அழைத்தும் எதிர்மனுதார் வர மறுத்துவிட்டார். எனக்கும் எதிர்மனுதாருக்கும் 2014ம் ஆண்டு பிரச்சனை ஏற்பட்டது. சம்பாதித்த பணத்தை எதிர்மனுதாரிடம் கொடுக்க வேண்டும் என்று தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும் எதிர்மனுதாருக்கும் சம்பளம் சம்பந்தமாக எப்பொழுதும் பிரச்சனை ஏற்பட்டது கிடையாது. எதிர்மனுதார் எனக்கு தெரியாமல் அதிக கடன் வாங்கியதால் பிரச்சனை ஏற்பட்டது. கடன் பெற்ற பிரச்சனை 2011ம் ஆண்டே எனக்கும் எதிர்மனுதாருக்கும் முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு 2011ம் ஆண்டு கடன் சம்பந்தமான பிரச்சனை முடிந்துவிட்டதாக மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் மனுவில் கடன் சம்பந்தமாக ஏற்பட்ட மனஸ்தாபம் எங்களுக்குள் நீங்கியதாக

கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் எதிர்மனுதாருக்கும் 2014ம் ஆண்டு சண்டை ஏற்பட்டதால் தான் அதுமுதல் நான் தனியாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். 2011ம் ஆண்டு முதல் 2014 வரை எதிர்மனுதார் மற்றும் எனது குழந்தையின் பராமரிப்பிற்கு பண உதவி செய்துள்ளேன். நான் மாதம் ஒரு முறை ஊரிற்கு வந்து மனைவி குழந்தையை பார்த்து பணம் கொடுத்து செல்வேன். இவ்வழக்கு தாக்கல் செய்யும் தேதிவரை நான் எதிர்மனுதார் வீட்டிற்கு வந்து செல்வேன். நான் எதிர்மனுதாரை திருமணம் செய்தது என்னுடைய குடும்பத்தாருக்கு பிடிக்கவில்லை என்றால் சரிதான். நான் மலேசியாவில் இருக்கும்போது என்னுடைய தகப்பனார் வீட்டு கட்டுமானம் செய்தார் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் வீடு கட்டும்போது பெற்ற சொசைட்டி கடனை நான் மலேசியாவில் இருந்து என்னுடைய மனைவி மூலம் பணம் அனுப்பி கடனை திருப்பி செலுத்தினேன் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனாருக்கும் நானும், என் அண்ணன் மற்றும் அக்கா வாரிசுகள் என்றால் சரிதான். என்னுடைய அக்காவிற்கு ஏற்கனவே திருமணமாகி அவரது கணவர் வீட்டில் உள்ளார் என்றால் சரிதான். என்னுடைய அக்கா வெளியூரில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். எனக்கு தற்சமயம் சேர்ந்தமரத்தில் சொந்த வீடு கிடையாது என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் சொத்தில் எனக்கு பங்கு உள்ளது என்றால் சரிதான். ஆனால் என்னுடைய அக்காவிடம் பெற்ற கடனிற்கு ஈடாக என் பாகத்தினை என் அக்காவிற்கு என்னுடைய தகப்பனார் எழுதி கொடுத்துவிட்டார். மேற்கண்ட சங்கதியை மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் இறந்து சுமார் 3 ஆண்டுகள் ஆகிறது. என்னுடைய தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் இருந்து இறந்துபோனார் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும்போது நான் என்னுடைய தகப்பனாரை அழைத்து சென்று என்னுடைய சகோதரர் பெயருக்கும், என்னுடைய சகோதரி பெயருக்கும் என்னுடைய தகப்பனார் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 27.09.2019 தேதிய என்னுடைய சகோதரி வேலுத்தாயிக்கு ஏற்படுத்தி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் **எ.மா.சா.ஆ.3** ஆகும். 27.09.2019 தேதிய என்னுடைய சகோதரர்

குமாருக்கு ஏற்படுத்தி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் **எ.மா.சா.ஆ.4** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கடிதம் நான் மலேசியாவில் இருக்கும்போது எதிர்மனுதாருக்கு எழுதியது என்றால் சரிதான். அது **எ.மா.சா.ஆ.5** ஆகும் எனது மகனிற்கு தற்போது 18 வயது ஆகிறது. என்னுடைய மகனின் படிப்பு விசயம் எனக்கு தெரியும். இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் எனது மகனை நான் படிக்க வைக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய அக்காவிடம் பெற்ற கடனை திருப்பி செலுத்த எனக்கு வருமானம் இல்லை என்பதால் அதை திருப்பி செலுத்தவில்லை. என்னுடைய அக்காவிடம் கடன் பெற்றதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எனது தகப்பனார் சொத்தில ்எனது மகனுக்கு உரிமை எதுவும் ஏற்பட்டுவிட கூடாது என்பதற்காக மோசடியாக நானே சாட்சியாக நின்று எ.மா.சா.ஆ.3, 4னை ஏற்படுத்தி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மகன் மீது எனக்கு ரொம்ப பாசம் உள்ளது என்றால் சரிதான். எனது மகன் பெயரில் சொத்து எதுவும் இருக்ககூடாது என்று நினைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவிக்கு நான் பண வசதி எதுவும் செய்யவில்லை என்றால் 2018ம் ஆண்டு எனக்கு தெரியாமல் எதிர்மனுதார் வீட்டை விற்றதால் பணம் கொடுக்கவில்லை. மேற்கண்ட சங்கதியை மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். நான் மலேசியாவில் இருந்து அனுப்பிய பணத்தை வைத்து எதிர்மனுதர்ா வீடு கட்டியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மலேசியா சென்ற கடனையும், செலுத்த முடியாமல் குடும்ப செலவிற்கு அக்கம் பக்கத்தில் கடன் வாங்கியும் எதிர்மனுதார் குடும்பம் நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. மனுவில் நான்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் 2011ம் ஆண்டு முதல் நான் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். நான் மனுவில் குறிப்பிட்டுள்ள என்னுடைய விலாசமானது எதிர்மனுதாரின் வீடு என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு முன்னர் எதிர்மனுதாருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்ப்பட்டது எனக்கு தெரியும். அந்த மருத்துவ செலவிற்கு நான் பண உதவி எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதார் 2014ம் ஆண்டு ஆலங்குளம் காவல்நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் எங்களை சேர்ந்து வாழ அறிவுறுத்தினார்கள் என்றால்

சரிதான். அதன்படி நான் சேர்ந்து வாழ எதிர்மனுதார் வீட்டிற்க சென்ற போது அவர் என்னை விரட்டிவிட்டார். எதிர்மனுதார் சேர்நது வாழ வரமறுத்ததால் மட்டும் தான் விவகாரத்து கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன். வேறு எந்த காரணத்திற்காகவும் இம்மனுவினை தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரை நான் சந்தேகப்பட்டு அடித்தேன் என்றால் சரியல்ல. மலேசியாவில, இருந்து வந்த பின்னர் எதிர்மனுதாரை வீண்சந்தேகபபட்டும் அதிக செலவிற்கான காரணம் கேட்டும் அடித்து கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. 2011ம் ஆண்டிற்கு பின்னர் 2018ம் ஆண்டு வரை எதிர்மனுதார் என்னிடம தினம் போனில பேசிக்கொள்வார். நான் தான் எதிர்மனுதாருக்கு தினமும் போன் செய்வேன். எதிர்மனுதார் எனக்கு பலமுறை போன் செய்தும் நான் வேறு ஒரு பெண்ணிடம தொடர்பில் இருந்தால் வேண்டுமென்றே போனை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதார் என்னுடன் சேர்ந்து வாழ ஆசைப்பட்டபோதிலும் நான் தான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை 2011ம் ஆண்டு முதல் நான் தான் பராமரித்தேன் என்றாலும், குழந்தைக்கு நான் தான் படிப்பு செலவினை கவனித்தாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 ஆண்டுகளாக என்னுடைய மகன் என்னிடம் பேசமாட்டார். நான் எதிர்மனுதாரை சேர்ந்து வாழ அழைத்ததாக பொய்யாக சாட்சியமி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் நியாயமான காரணம் இன்றி எதிர்மனுதாரை பிரிந்து வேறு ஒரு பெண்ணுடன் குடும்பம் நடத்தி எதிர்மனுதாருக்கு மன கஷ்டம் ஏற்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் 2011ம் ஆண்டு கேரளாவில் குடியிருந்தது முதல் சுபியா என்ற பெண்ணுடன் குடும்படம் நடத்தி வ்நததால் தான் எதிர்மனுதாரை கேரளாவிற்கு அழைத்து செல்லாமல் உதாசீனப்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. எனவே தான் பொய்யான சங்கதிகளை கூறி இம்மனுவினை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மவி இல்லை**